**செய்தி வெளியீடு எண்: 473** **நாள்: 21.07.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (21.7.2018) சென்னையில் நடைபெற்ற ஆச்சார்ய ஸ்ரீ மஹாஸ்ரமண் அவர்களின் சதுர்மாஸ் பிரவாஸ் விழாவில் ஆற்றிய உரை**

மேடையிலே வீற்றிருக்கின்ற தவநெறியாளர் அருட்திரு. மகாஸ்ரமண் அடிகளார் அவர்களே,
அவருடைய சீடர்களே,
இங்கு பெருந்திரளாக வருகை தந்திருக்கின்ற ஜெயின் சமூகத்தினரே,
இங்கு கூடியிருக்கின்ற சகோதர, சகோதரிகளே,
இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற அமைச்சர் பெருமக்களே,
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களே,
வருகை தந்துள்ள அனைவருக்கும் பணிவான வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா ஒரு திருக்கோயில் என்றால்,
அதில் இறைவன் உறைந்திருக்கும்
கருவறைதான் 'தமிழ்நாடு'

மகான்களை தோற்றுவிக்கும் ஞானபூமி, 'தமிழ்நாடு'.
பக்தியும் அறமும் தழைத்து விளையும்
புண்ணிய பூமி, 'தமிழ்நாடு'.

பல்வேறு இடங்களில் இருந்து,
ஞானிகளும், மகான்களும், குருமார்களும்,
ஆன்மிகத் தேடலுக்காகவும், அமைதிக்காகவும் தமிழ்நாட்டுக்கு வருகை தருவது என்பது
தொன்று தொட்டு நடைபெற்று வரும் சிறப்பாகும்.

இதன் அடிப்படையில்,
நல்லெண்ணம், அஹிம்சை, போதை ஒழிப்பு
ஆகியவற்றை முன்னிறுத்தி, இன்று தமிழ் மண்ணில் நடைபயணம்
மேற்கொண்டுள்ள தவநெறியாளர்
அருட்திரு. மகாஸ்ரமண் அடிகளாரை தமிழ்நாட்டு மக்கள் சார்பாக வரவேற்பதில்
பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இனிய விழாவிற்கு வருகை தந்துள்ள,

உங்கள் அனைவரையும் சந்திப்பதில்
பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகில் உள்ள அனைத்து சமயமும்
மனிதனை பக்குவப்படுத்துவதையே
நோக்கமாகக் கொண்டுள்ளன.

தீங்கு செய்யாமை, கொல்லாமை,
பொய்யாமை, தூய்மை, கருணை,
இரக்கம், உலக அமைதி, அறவாழ்வு போன்ற உண்மைகளை மனிதர்களிடத்தில் விதைப்பதே
அனைத்து சமயங்களும் தலையாய கடமையாகக் கொண்டுள்ளன.

சமயங்கள் பரப்பும் கொள்கைகள் அனைத்தும் மனிதர்கட்கு இம்மையிலும், மறுமையிலும்
இன்பத்தை விளைவிக்கின்றன.

50 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1968–ஆம் ஆண்டு **அருட்திரு துளசி அடிகளார்** அவர்கள்,
உலக அமைதிக்காக நடைபயணம் மேற்கொண்டு, முதன்முதலில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்தபோது,
அன்று முதலமைச்சராக இருந்த
எங்கள் இயக்கத்தின் ஆணிவேர்,
பேரறிஞர் அண்ணா அவர்கள்,
சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் தமிழ் நாட்டு மக்களின் சார்பாக
‘**தமிழ்நாடு அரசின் சிறப்பு விருந்தினர்**’
என்ற அந்தஸ்தை அடிகளார் அவர்களுக்கு
அளித்து வரவேற்றார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில்,
மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
அவர்களின் ஆசியில், மாண்புமிகு
புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
உழைப்பில் அமைந்த மாண்புமிகு அம்மாவின் அரசு,
இன்று **தவத்திரு மகாஸ்ரமண்** அவர்களை
வரவேற்று சிறப்பிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள்
தமிழ்நாட்டின் சிறப்பு விருந்தினர் என்ற சிறப்பை

தவத்திரு **துளசி அடிகளாருக்கு** எப்படி அளித்தாரோ,
அதைப் போலவே, **தவத்திரு துளசி அடிகளாரின்** சீடரான **தவத்திரு மகாஸ்ரமண்** அவர்களுக்கு,
'**தமிழ் நாடு அரசின் சிறப்பு விருந்தினர்**'
என்ற சிறப்பை அளித்து, நாங்கள் வரவேற்கிறோம்.

ஓராண்டு காலம் தமிழ்நாட்டின்
மூலைமுடுக்குகளுக்கு எல்லாம் நடைபயணம் மேற்கொண்டு, அஹிம்சை, அமைதி,
அன்பு ஆகியவற்றை பரப்பி,

தமிழ்நாட்டில் அறநெறிகளை தழைத்தோங்கச் செய்யும் தவநெறியாளர் அவர்களை
நான் மனமார உவந்து பாராட்டுகிறேன்.

புலன்களை அடக்கி, தன் கட்டுப்பாட்டுக்குள்
கொண்டு வந்து, அவற்றை, மக்கள் நலனுக்காக பயன்படுத்துவது தான் 'அறிவு' என்று
திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய அறிவைப் பெற்றவர்கள்தான்,
**ஞானிகள் என்றும் மகான்கள்** என்றும் அழைக்கப்படுகின்றனர். உலக நன்மைக்காக
தன்னை வருத்திக்கொண்டு தவம், உண்ணா நோன்பு, நடைபயணம்
ஆகியவற்றை மேற்கொள்கிறார்கள்.

திடமான நம்பிக்கை, மேன்மையான அறிவு,
நற்செயல் என்ற போதனைகளை மக்களிடையே போதித்தவர் **மகாவீரர்** ஆவார்.

இவருடைய போதனைகளும், தத்துவங்களும்
இன்றும் உலகம் முழுவதும் அனைத்துத் தரப்பு மக்களாலும் ஏற்றுக்
கொள்ளப்பட்ட ஒன்றாக போற்றப்படுகிறது.

அத்தகைய ஞானியின் வழியில் வந்தவர்தான்,
நமது **தவநெறியாளர் மகாஸ்ரமண்** அவர்கள்.
சமூக உணர்வையும் தேசிய உணர்வையும் உள்ளடக்கிய
மகான்களும், ஞானிகளும் தான் இன்றளவும் மக்கள் மனதில் நிலைத்து நின்று
போற்றப்படுகிறார்கள்.

**‘ஊருக்கு உழைத்திடல் யோகம் – நலம்**
**ஓங்குமாறு வருந்துதல் யாகம்**’ என்கிறார்
தேசிய கவி பாரதியார் அவர்கள்.

யாகம் என்பது இறைவனை நோக்கி தவமிருந்து,
துதித்து பலன் பெறுவது அல்ல.
மக்கள் நலனுக்காக தன்னை
வருத்திக் கொள்வதுதான் **யாகம்.**

அவ்வாறு பிறர் நலனுக்காக
தன்னை வருத்திக் கொள்ளும் ஞானிகளைத்தான்
இந்த உலகம் வரவேற்று, போற்றுகிறது.

ஒவ்வொருவருக்கும் தாய் தந்தை எவ்வளவு முக்கியமோ,
அந்த அளவிற்கு குருவும் முக்கியமானவர்.
உலகைக் காட்டுபவர்கள் குருமார்கள்.

மகாபாரதத்தில் **அர்ச்சுணனுக்கு**
தேரோட்டியாகத் திகழ்ந்ததோடு மட்டுமல்லாமல்,
குருவாகவும் இருந்து பகவத் கீதையை அருளிய
**கண்ணபிரான்** இன்றளவும் சிறந்த குருவாகப் பேசப்படுகிறார்.

சிவாலயங்களில் கைவிரல் காட்டி,
குறிப்பினால் உபதேசம் செய்யும் தட்சிணாமூர்த்தியைத்தான் நாம்
‘‘குரு’’ என்ற கடவுளாக துதிக்கின்றோம்.
இந்தியப் பண்பாடு, குருவின் திருவடி பணிந்து வணங்கி போற்றுகின்ற
பண்பாடாகும்.

**‘தெளிவு – குருவின் திருமேனி கண்டல்**
**தெளிவு – குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு – குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு – குருவுரு சிந்தித்தல் தானே’** – என்று
குரு வழியில் நடக்கும் சீடர்களின் நிலையை
திருமூலர் அழகாக கூறியிருக்கிறார்.

மகான் கபீர்தாசரிடம்,
**‘உன் முன்பாகக் குருவும், கடவுளும்**
**ஒரே நேரத்தில் தோன்றினால்,**
**நீ யாரை முதலில் வணங்கிப் பணிவாய்’**

என்ற கேள்வி கேட்கப்பட்ட போது,
சிறிதும் யோசிக்காமல்,
கபீர்தாசர் சொன்ன பதில் என்ன தெரியுமா ?

“**நான் முதலில் குருவைத்தான் வணங்கிப் பணிவேன்.
ஏனென்றால், இறைவன் இருக்கிறார் என்பதையே
எனக்கு குருதான் சொல்லித் தந்தார்**”
என்பதுதான் அந்த பதில்.

இதன் வழியில் வந்தது தான்
‘**மாதா, பிதா, குரு, தெய்வம்**’ என்னும் தத்துவம்.

அத்தகைய குருநிலையில் வைத்துதான்
இன்று மக்கள்நல நோக்கத்துடன்
நடைபயணம் மேற்கொண்டுள்ள
**தவத்திரு மகாஸ்ரமணார்** அவர்கள்,
800 க்கும் மேற்பட்ட துறவியர்களையும்,
பல்லாயிரக் கணக்கான சீடர்களையும்
வழிநடத்தி வருகிறார்.

அவர்களைப் போலவே, மாண்புமிகு அம்மா அவர்கள் எங்களுக்கெல்லாம் குருவாக திகழ்ந்து எங்களையும், தமிழ்நாட்டு மக்களையும் வழி நடத்தி வருகிறார்கள்.

குரு நிலையில் வைத்துதான் மாண்புமிகு அம்மா அவர்களை நாங்கள் போற்றி துதிக்கின்றோம்.

தவத்திரு துளசி அடிகளாரைப்போல,
அவருடைய சீடர் தவத்திரு மகாஸ்ரமண் அவர்களைப் போல, மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

**அடிகளாரின் வழி ‘ஆன்மிக வழி’
மாண்புமிகு  புரட்சித் தலைவி அம்மா அவர்களின்
வழி ‘அரசியல் வழி’.
இரண்டு வழிகளும் சேரும் இடம் ஒன்றுதான் –**

**அதுதான் மக்கள் நலம்  காக்கும் ‘அறம்’ ஆகும்.**

தோன்றும் பொருட்கள் யாவும் ஒரு நாள் அழியக்கூடியதே. எனவே உடல் நலமாக உள்ளபோதே வீட்டிற்கும், நாட்டிற்கும் நன்மை தரும் அறச் செயல்களை  மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களைப் போல் செய்ய வேண்டும்.

மகான்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்டு,
அவர்களுடைய அறவழியில் நடந்தால்,
தனிமனிதனுக்கு துன்பமோ, நாட்டுக்கு குழப்பமோ,
ஏற்பட வாய்ப்பில்லை.
வெளிநாடுகளில் குறிப்பாக மேலை நாடுகளில்
மக்களின் புறவாழ்க்கை ஆடம்பரமாகவும், இயந்திரத்தனமாகவும் இருக்கின்றது.

ஆனால், அகவாழ்க்கை போராட்டம் மிக்கதாகவும், அமைதியற்றதாகவும் இருப்பதை நாம் பார்த்து வருகிறோம். காரணம், அங்கே அமைதியாக வாழ வழிசொல்லும் மகான்களும், குருமார்களும் அதிகமாக தோன்றுவதில்லை. அதனால்தான், அந்நாட்டு மக்கள்
மன இறுக்கத்தால் துயரம் அடைகிறார்கள்.

ஆகவே, அவர்கள் மனஅமைதிக்காக
ஞானிகளையும் மகான்களையும் குருமார்களையும் தேடி
இந்தியாவிற்கு வருகிறார்கள். குறிப்பாக தமிழ்நாடுதான் அவர்களுக்கு சரணாலயமாக திகழ்கிறது. தமிழ்நாடுதான் அடைக்கலம் கொடுத்து அவர்களை அமைதிப்படுத்தி மகிழ்விக்கிறது.

அதனால்தான்,
**‘பலவிதமான சாத்திரத்தின் மணம்**
**பாரெங்கும் வீசும் தமிழ்நாடு**’ என்று பாரதியார் பாடினார்.

மனிதனிடம் தன்முனைப்பு அதிகரிக்க, அதிகரிக்க,
பொருள், புலனின்பம், புகழ் என்னும் மாயையில்
சிக்கிக் கொண்டு, இன்னும் வேண்டும்,
இன்னும் வேண்டும் என்னும் பேராசையிலிருந்து
விடுபட முடியாமல் மனம் தவிக்கிறது.

இந்தத் தவிப்பினால் சிந்தனையாற்றல் மயங்கி,
**பேராசை, சினம், கடும்பற்று,**
**உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம்**
ஆகிய தீய குணங்கள் மனிதனுக்குள் உருவாகின்றன.

பேராசையாலும், ஆடம்பர மோகத்தாலும் மனம் சிதைந்து, இயந்திர வாழ்க்கைக்கு தள்ளப்பட்ட
ஆயிரக்கணக்கான மேலை நாட்டினர்,

நமது மகான்களாலும் குருமார்களாலும்
மடை மாற்றம் செய்யப்பட்டு,
தங்களை நமது பண்பாட்டோடு இணைத்துக் கொண்டு
வாழ்வதை கண்கூடாகப் பார்க்கின்றோம்.
இதைக் கூறும்போது எனக்கு ஒரு கதை
நினைவுக்கு வருகிறது.

ஒரு மன்னர்,
அவர் சிறந்த வீரன் ஆகையால்,
தனது சாம்ராஜ்யத்தை அடிக்கடி
விஸ்தரித்துக் கொண்டிருந்தார்.

அவர் வெற்றி பெற்ற நாடுகளிலிருந்து கிடைத்த
வைரம், வைடூரியம், நவரத்தினம் ஆகிய கற்கள் மூலம்
தனது கஜானாவை நிரப்பி இருந்தார்.
அதனால் அவரிடம் தற்பெருமை அதிகமாயிற்று.

ஒரு நாள், ஒரு புகழ் பெற்ற துறவி
அவரது அரண்மனைக்கு வந்தார்.
மன்னர், துறவியிடம், தான் வென்ற நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட
வைரக்கற்களை காட்டி மிகவும் பெருமைப்பட்டார்.

**‘இதைவிட ஒளிவீசும் கற்களை கண்டதுண்டா’**
என்று கேட்டார்.
அதற்கு அந்த துறவி,
**‘ஆம், நான் இதைவிட சிறந்த கற்களை பார்த்திருக்கிறேன்’** என்று கூறினார்.
உடனே அந்த மன்னர்,
**‘நான் அதனை உடனடியாக பார்க்க வேண்டும்’**
என்று கூறினார்.
**‘உடனே பார்க்கலாம், அதுவும்
உங்கள் நாட்டின் எல்லையில்தான் உள்ளது’** என்றார்.

பிறகு மன்னரை அந்த இடத்திற்கு

அழைத்துக் கொண்டு சென்றார்.

ஊரின் எல்லையை அடைந்து
அரண்மனைக்குச் சொந்தமான சத்திரத்திற்குள்
அந்த துறவி புகுந்தார்.
அங்கு சென்று மன்னரிடம் தானியம் அரைக்கும்
கல் ஒன்றினை காண்பித்து,

**“இது, வழிப்போக்கர்கள்**
**இங்கு வந்து தங்கும்போது**
**அவர்களுக்கு உணவு தயாரிக்க**
**பயன்படுத்தப்படும் கல்.**
**‘இந்தக் கல் உன்னிடம் உள்ள**
**கல்லைவிட மிகவும் பெரியது’ என்றார்.**

**“ஏனென்றால், உன் மூதாதையர் காலந்தொட்டு**
**இந்தக் கல் இங்கே இருக்கிறது.**
**இங்கு தங்குவோர் அனைவரின் பசியையும் போக்கி,**
**அரச வம்சத்தின் புகழை ஞாபகப்படுத்துகிறது.**
**பல பசியாறிய வழிப்போக்கர்கள்**
**உன்னையும் உன் மூதாதையர்களையும்**
**வாழ்த்தி வணங்கி விட்டுச் செல்கின்றனர்.**
**ஆனால், உன்னிடம் உள்ள வைரக்கற்கள்**
**அதை வைத்திருந்த அரசர்களை மட்டுமின்றி பல்லாயிராக்கணக்கான வீரர்களின் உயிர்களை பறித்தவை.**

**எனவே, பல்லாயிரக்கணக்கோரின்**
**பசியை போக்கிய இந்த கல் சிறந்ததா ?**
**பல்லாயிரக் கணக்கானோரின் உயிரைப் பறித்து கொண்டு வரப்பட்ட இந்த வைரக்கற்கள் உயர்ந்ததா ?”**
என்று அந்த துறவி, மன்னரிடம் கேட்டார்.

உடனே மன்னர்,
**‘சுவாமி! தாங்கள் கூறுவது அனைத்தும் உண்மை. இனிமேல் நான் உயிர் உள்ளவரை போர் புரியமாட்டேன். அன்பே என் வழியாகக் கொண்டு வாழ்வேன்’**
என்று துறவியிடம் உறுதி அளித்தார்.

அதன் பின்னர் அவர் போர் புரிதலை விட்டொழித்து,
அகிலம் போற்றும் மாமன்னராக திகழ்ந்தார்.

இந்த கதையின் மூலம்,
**‘அன்பு’ மற்றும் ‘அறம்’** ஆகியவைதான்
என்றும் நிலைத்து இருப்பது என
நாம் தெரிந்து கொள்ளலாம்.

எனவே, இன்றைய காலகட்டத்தில்
சமுதாயத்தில் நடந்து வரும் தீமைகளையும்,
இழிவான செயல்களையும்,
தங்களுடைய தூய போதனைகளால்
தடுத்து நிறுத்தி, மனிதனை செம்மைப்படுத்தும் நற்பணிகளை மேற்கொண்டு வருகின்ற, போற்றுதலுக்கும், வணக்கத்திற்கும் உரிய
**தவத்திரு மகாஸ்ரமண்** அவர்கள்,
தம் சீடர்களுடன் தமிழ்நாட்டுக்கு வருகை புரிந்திருப்பதை நான் பெருமையாக கருதுகிறேன்.

**தவத்திரு மகாஸ்ரமண்** அவர்களின் அகிம்சை நடைப்பயணம் வெற்றி பெறவும், அவரது அறப்பணி தொடர்ந்து நடைபெற்று, மக்களுக்கு நலம் பயக்க வேண்டும் என்றும் நான் இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே, ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தந்த மரியாதைக்குரிய பி.ஆர்.ஓ. திருமதி மாலா காத்ரேலா அவர்களுக்கும், அவருக்கு துணை நின்றவர்களுக்கும், எனது மனமார, உளமார நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, அதுமட்டுமல்லாமல், சென்னையில் வசிக்கின்ற மக்களுக்கு, புயல், வெள்ள காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, ஜெயின் சமுதாயத்தை சேர்ந்த மக்கள், ஓடோடி வந்து அந்த காலகட்டத்தில் உதவி புரிந்ததை நன்றாக பார்க்க முடிந்தது. இந்த ஜெயின் சமுதாயத்தினரை பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன். அப்படி நல்ல உள்ளம் படைத்தவர்களை என்றென்றும் வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி!

வணக்கம்!.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**